தமிழ் சுடர்
சுப்பிரமணியன்

# இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணையம் சிவில் சமூகத்துடன் இணைந்து சுதந்திரமாக செயல்பட வேண்டும்

## மனித உரிமை செயற்பாட்டாளர் ஹென்றிதிபேன் பேட்டி

மதுரை, ஏப்.28

மனித உரிமை செயற்பாட்டாளரும் மக்கள் கண்காணிப்பக இயக்குனர் ஆன ஹென்றி தீபன் மதுரை மக்கள் கண்காணிப்பு அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்துபேசினார்

அப்போது தேசிய மனித உரிமை ஆணையம் தொடர்பாகGANHRI அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக பேசினார் :இந்தியாவில் மட்டும் தான் மாநிலத்தில் 1 ஆணையங்களும்தேசிய அளவில் 160 ஆணையங்களும் செயல்பட்டு வருகிறது .உலகெங்கும் உள்ள ஒட்டுமொத்த நாடுகளும்இந்தியாவில்உள்ள ஆணையங்களை பின்பற்றி அதே போன்று உருவாக்க வேண்டும் என சொல்லும் வகையில் இந்தியாவில் உள்ள ஆணையங்கள் முன்னுதாரணமாக இருந்துவருகிறது.உலகெங்கும் உள்ளநாடுகளில் உள்ள மனித உரிமை ஆணையங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளக்கூடிய GANHRIஎன்ற அமைப்பானது. நான்காண்டுகளுக்கு ஒரு முறைமனித உரிமை ஆணையங்கள் சுதந்திரமாக செயல்படுகிறதா என்பது குறித்தான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இந்தியாவில் உள்ள தேசிய



மனித உரிமை ஆணையத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் பரிசீலனை தொடர்பான கூட்டங்களில் 2016 , 2023 மற்றும் 2024ம் ஆண்டுகளில் மூன்று முறை பரிசீலனை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி வைக்கப்பட்டது .30 ஆண்டுகளில் தேசிய உரிமை ஆணையம் தரம் குறைந்தது கிடையாது ஆனால் தற்போது நேற்றைய தினம் GANHRI அமைப்பின் அறிக்கையில் தேசிய மனித உரிமை ஆணையம் பி கிரேடு Statusஎன்றநிலையில்குறைந்துள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பாகதேசிய மனித உரிமை ஆணையம் மேல் முறையீடு செய்திருக்கிறார்கள் அந்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளது.உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருந்த தேசிய மனித உரிமை ஆணையம் பி கிரேடுக்கு சென்றது நமது தேசத்திற்கு விழுந்த அடி என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.இதுபோன்று தேசிய மனிதஉரிமை ஆணையத்தின் பிரச்சினைகளை யாரும் வெளியில் பேச மாட்டார்கள் எனவே இந்தப்பணிகளை செய்ததால் தான் எங்கள் இன்று வரை இல்லாமல் செயல்படும் சூழல் உள்ளது.இது குறித்து அறிக்கையில் GANHRI அமைப்பு அறிக்கையில் புகார்களை பெறும் போது தேசிய மனித உரிமை ஆணையம் காவல் துறையினரை மட்டும் வைத்து விசாரணை நடத்துவதாக தெரிவித்துள்ளனர். மேலும் மனித உரிமைமீறல்காவல்துறைக்கு எதிரானது ஆனால் அதே காவல்துறையினரை வைத்து விசாரணை செய்வதுஉங்களுடைய ஆணையத்தின்செயலாளர்கள் எப்போதும் ஐஏஎஸ் அதிகாரிகளாக இருக்கிறார்கள் சுதந்திரமாக செயல்படக்கூடிய தலைமைநிர்வாக அதிகாரியை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையை 2011 ஆம் ஆண்டு கூறியிருக்கிறார்கள் ஆனால் அதை செய்யவில்லை டிஜிபியாக ஐபிஎஸ் ஆபிஸரை நியமித்திருக்கிறீர்கள். ஏன் அரசு வழக்கறிஞர்களை நியமிக்க கூடாது என குறிப்பிட்டுள்ளனர் என்றார்.